பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
காரைக்கால் & இந்திய வானிலைத்துறை

# காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(17.05.2023 முதல் 21.05.2023 வரை)

தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182
E-mail: agronaas2012@gmail.com தொ. நகல் (அலுவலகம்): 04368-261260

அறிக்கை எண்: 39 (05) PJN/GKMS/2023 தேதி: 16.05.2023

## காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (11.05.2023 முதல் 15.05.2023 வரை) | | | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு -21.05.2023 – 8.30 மணி நேரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **11/05** | **12/05** | **13/05** | **14/05** | **15/05** | | நாள்-1 17/05 | நாள்-2 18/05 | நாள்-3 19/05 | நாள்-4 20/05 | நாள்-5 21/05 |
| 0 | 0 | 0 | 0 | 0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 38 | 36 | 36 | 38 | 38 | அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 38 | 38 | 39 | 39 | 39 |
| 28 | 26 | 27 | 27 | 28 | குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 28 | 28 | 29 | 29 | 29 |
| 5 | 4 | 3 | 4 | 1 | மேக மூட்டம் | 6 | 3 | 2 | 2 | 2 |
| 57-85 | 56-84 | 57-85 | 57-85 | 57-91 | ஈரப்பதம் (%) | 30-70 | 30-70 | 40-80 | 40-80 | 40-80 |
| 3 | 5 | 8 | 8 | 10 | காற்றின் வேகம் (கி.மீ) | 12 | 10 | 12 | 14 | 14 |
| மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | தெற்கு தென் மேற்கு | காற்றின் திசை | தெற்கு | தெற்கு தென் மேற்கு | தெற்கு தென் மேற்கு | தெற்கு தென் மேற்கு | தெற்கு தென் மேற்கு |

### எதிர்பார்க்கப்படும் வானிலை (17.05.2023 3 முதல் 21.05.2023 வரை):

- அடுத்த ஐந்து நாட்களுக்கு பெரும்பாலான பகுதிகளில் வறண்ட வானிலேயே எதிர்பார்க்கப்படும். வானம் ஓரளவுக்கு மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்ப நிலை 28-39 டி.செ, மாலை மற்றும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 30-80 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 10-14 கி.மீ அளவுக்கு பதிவாக வாய்ப்புள்ளது. காற்றானது பெரும்பாலும் தெற்கு தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.
- மே 21 லிருந்து 27 வரை மழை (1.54 மி.மீ), அதிகபட்ச வெப்பநிலை (35.41 டி.செ) மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை (24.59 டி.செ) இயல்பாக இருப்பதற்கு வாய்ப்புள்ளது.

## வேளாண் அறிவுறை

| பயிர்கள் / கால் நடைகள் | பருவம்/ விவரங்கள் | வேளாண் ஆலோசனைகள் |
|---|---|---|
| பருத்தி | பயிர் வளர்ச்சி பருவம் | மேகமூட்டமான வானிலையுடன் மழையும் சேர்ந்து பருத்தியில் பூ உதிர்வதை அதிகரிக்கும். எனவே மழை இல்லாத நாட்களில், பருத்தியில் பூ உதிர்தலை தடுக்க 40 பி.பி.எம் என்.ஏ.ஏ கலவையை (அதாவது லிட்டருக்கு 40 மில்லி கிராம் நாப்தலீன் அசிடிக் அசிட் என்ற அளவில் ) விதைத்த 60 மற்றும் 90 வது நாட்களில் தெளிக்கவும். |
| | | பருத்தியில் இரகங்களுக்கு 15 வது கனுவிலும், ஒட்டு செடிகளுக்கு 20 வது கனுவிலும் நுனி கிள்ளுவதன் மூலம் மகசூலை அதிகரிக்கலாம். |

| | | |
|---|---|---|
| தென்னை | சுருள் வெள்ளை ஈ | தற்போது நிலவி வரும் தட்ப வெப்ப சூழ்நிலையால் தென்னையில் சுருள் வெள்ளை ஈக்களின் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, சுருள் வெள்ளை ஈக்களின் தாக்குதல் தென் பட்டால் அவற்றை கட்டுப்படுத்த தண்ணீரை நன்கு பீய்ச்சி அடித்தும் மற்றும் ஏக்கருக்கு 8 மஞ்சள் நிற ஒட்டும் பொறிகளையும் வைத்து கட்டுப்படுத்தவும். இதன் தாக்குதல் அதிகமாக இருப்பின் வேப்பஎண்ணெய் 0.5 %+ டிவீன் 80 (0.005%) பயன்படுத்தவும். |

**குறுஞ்செய்தி:** பருத்தியில் நுனி கிள்ளுவதன் மூலம் மகசூலை அதிகரிக்கலாம்.

**முதல்வர்**